## காவல்துறை தலைவர்/காவல் ஆணையாளர்,திருநெல்வேலி மாநகரம் அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை: திரு.N.பாஸ்கரன்,இ.கா.ப.,

ந.க.எண்.அ4/ 16128/2019 நாள். 06.08.2019

மா.கா,ஆ.எண். 666/2019.

குறுந்தலைப்பு : காவல் திருநெல்வேலி மாநகரம் - பணியமைப்பு கருணை அடிப்படை பணிநியமனம் - திரு.D.R.டார்வின் இளநிலை உதவியாளர், தற்காலிக பணியினை பணிவரன் முறைப்படுத்துதல் -தொடர்பாக.

படிக்க 1) : அரசாணை (நிலை) எண் 560 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள்.03.08.1977

2 : அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை (க்,யூ1)aதுறை, நாள் 02.03.2016

3 : அரசாணை எண் 220 உள்(கா.15) துறை நாள். 18.02.2016

4 : தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.041768/ சி.ஏ.ஆர்1/16,நாள்.21.12.2017.

********

ஆணை:

திரு.ச.தாசப்பன், காவல் துணைக் கண்காணிப்பாளர், குற்றப் புலனாய்வுத்துறை, சென்னையில் பணிபுரிந்து வந்த போது 30.09.1996 அன்று இறந்து விட்டார். அவரது குடும்பத்தில் பொருளிட்டும் நபர் யாருமில்லாததால் அவருடைய குடும்பம் வறுமையான சூழ்நிலையில் இருந்து வந்தது. எனவே அவருடைய மகன் திரு.D.R.டார்வின் என்பவர் தனக்கு காவல்துறையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 30.05.1997அன்று விண்ணப்பித்திருந்தார். திரு.D.R.டார்வின் என்பவரது பிறந்த தேதி 20.06.1972 ஆகும். இவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார்.

2)அவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்வதற்காக அரசு ஆணை(நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள்.03.08.1977மற்றும் அதன் தொடர்பான ஆணைகளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை நிறைவு செய்தள்ளார். எனவே அவரது விண்ணப்பத்தை பரிசீலனை செய்து இவர் 29.09.2005 முற்பகல் முதல் காவல் துறையில் கருணை அடிப்படையில் ரூ 2500/- தொகுப்பு ஊதியத்தில் கணினி விபரப்பதிவாளராக தூத்துக்குடி மாவட்ட காவல் அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டு அரசாணை எண்

Scanned by CamScanner

4D 52உள்(காவல்-15) துறை நாள்,22.06.2007 மற்றும் தலைமை அலுவலக மேல்வரைவு எண்.சி.எ.1/8639/2009, நாள்.29.06.2007ன்படி 01.05.2007 முதல் 3050-75-3950-80-4590 என்ற அடிப்படை காலமுறை ஊதியம் பெற்று வந்தவரின் பணி அரசாணை எண் 220 உள்(காவல்-15) துறை நாள்18.02.2016 மற்றும் தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்.130052/ NGB 2(2)/2016 நாள்.26.09.2017 ன்படி தூத்துக்குடி மாவட்ட காவல் அலுவலகத்தில் தற்காலிக கணினி விபர பதிவாளராக பணிபுரியும் திரு.D.R.டார்வின், என்பவர் உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அவருடைய கணினி விபர பதிவாளர் பணியில் 01.05.2007 முற்பகல் முதல் பணியினை வரன்முறை செய்து சென்னை இருப்புபாதை காவல் கண்காணிப்பாளரின் ஆணை ந.க.எண். அ3/3833/2016 (ஆணைஎண் 187/2016) நாள்.13.06.16ன்படி ஆணையிடப்பட்டது.

2) கணினி விபரப்பதிவாளராக பணியாற்றி வரும் திரு.D.R.டார்வின் என்பவரது பெயர் தலைமை அலுவலக ஆணை ந.க.எண்.12506/CA1/14 நாள்.24.11.2014ன்படி சென்னை இருப்புபாதை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்டு 07.01.2015 முற்பகல் முதல் வரன்முறை செய்ய தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண். 041769/CAR1/2016 நாள்.21.12.2017ல் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கிணங்க கீழ்கண்ட விபரங்களை சரிபார்க்கப்பட்டது.

அ) அரசாணை (நிலை) எண் 560 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள்.03.08.1977ல் உள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்கிறார்.

ஆ) அரசாணை (நிலை) எண் 202 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள்.08.10.2007ன்படி மறைந்த அரசு ஊழியரின் மனைவி தன் மகனுக்கு கருணை அடிப்படை பணி நியமனம் வேண்டி மூன்று வருடத்திற்குள் மனு அளித்துள்ளார்.

இ) அரசாணை எண் 220 உள்(கா.15) துறை நாள். 18.02.2016ன்படி 29.09.2005ல் தற்காலிக கணினி விபர பதிவாளராக பணியமர்த்தப்பட்ட இவரது பதவி 01.05.2007 முதல் வரன்முறைபடுத்தப்பட்டது.

ஈ) கருணை அடிப்படை பணிநியமனம் தொடர்பான அனைத்து சான்றிழ்களும் சரிபார்க்கப்பட்டன.

Scanned by CamScanner

எனவே காவல்துறையில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணியாற்றி வரும் திரு.D.R.டார்வின், என்பவரின் பணி உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குபட்டு 07.01.2015 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப் படுகிறது.

ஓ/ம் நீ,பாஸ்கரன்
காவல் துறை தலைவர்/
காவல்ஆணையாளர்,
திருநெல்வேலி மாநகரம்.

பெறுநர்
திரு.D.R.டார்வின்,
இளநிலை உதவியாளர்,
மாநகர காவல் அலுவலகம், திருநெல்வேலி,

நகல் காவல்துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை,
நகல் அ5 பிரிவு மற்றும் பி2 பிரிவு
நகல் ஆணை புத்தகம்.

/உ.ந.உ.ப.அ.ப./

முதுநிலை நிர்வாக அதிகாரி
மாநகர காவல் அலுவலம்
திருநெல்வேலி மாநகரம்.

Scanned by CamScanner